**PUBLIC (ELECTIONS-I) DEPARTMENT**

**PRESS RELEASE**

The Election Commission of India has announced Special Summary Revision of Photo Electoral Rolls with reference to 01.01.2021 as the qualifying date.

2. The draft rolls have been published on 16.11.2020 (today) in all the districts in the Designated Locations (mostly polling station locations which are school buildings). The rolls are also hosted in the CEO's website: elections.tn.gov.in Copies of the Rolls will be handed over to the Recognized Political Parties by the District Election Officers.

3. As per the draft electoral rolls of Special Summary Revision of Photo Electoral Rolls of 2021, published today, the total electorate in Tamil Nadu is 6,10,44,358 (Male: 3,01,12,370, Female: 3,09,25,603, Third Gender: 6,385).

4. The highest electorate in the State is in 27. Sholinganallur Assembly Constituency with 6,55,366 electors (Male: 3,29,420, Female: 3,25,858, Third Gender: 88).

5. 164. Kilvelur Assembly Constituency has the lowest electorate in the State with 1,73,107 electors (Male: 84,902, Female: 88,205, Third Gender - Nil).

6. The Special Campaigns will be conducted on 21.11.2020, 22.11.2020, 12.12.2020 and 13.12.2020 which are Saturdays and Sundays at the Designated Locations (generally the polling stations). Forms for inclusion/ deletion/ modification/transposition of entries in the Electoral Rolls will be available at the Designated Locations. Filled in forms can be submitted there.

7. During the claims and objection period i.e. from 16.11.2020 to 15.12.2020 of Special Summary Revision of Photo Electoral Roll, 2021 an elector or an eligible citizen who wants to get enrolled or wants to make

deletion/correction/ transposition in existing entry may submit form 6, 7, 8 or 8A to:

(1) Booth Level Officer or Electoral Registration Officer / Assistant Electoral Registration Officers office on any working day;
(2) Booth Level Officers on Special Camp days at the respective polling stations;
(3) The Designated Officer at the designated location on any working day during the Summary Revision claims and objections period.

8. For inclusion, proof of address and age should be submitted along with the Form. For proof of residence copy of any one of the following documents viz., Indian Passport/ Driving Licence/ Bank Pass Book/ Kisan/ Post office current Pass Book/ Ration Card/ Income Tax Assessment Order/ Rent Agreement/Latest Water/Telephone/Electricity/Gas connection bill/ Post /Letter delivered by Indian Postal Department for that address may be submitted. Copy of Birth Certificate/Mark Sheet of Class 10, 8 or 5, if it contains date of birth/Indian Passport/PAN Card/Driving Licence/ Aadhaar Card issued by UIDAI may be submitted as proof of age. Proof of age is compulsory for applicants below 25 years of age. **Online filing is also possible by going to the websites www.nvsp.in, https://voterportal.eci.gov.in and VOTER HELP LINE mobile app.**

9. Persons who will be completing 18 years of age on 01.01.2021 and the persons whose names are not included in the Electoral Rolls can apply for inclusion in Form-6. Applicants should compulsorily fill in the 'Declaration' column of Forms submitted by them. **For quality improvement of the electoral roll, the applicants have been advised to paste/upload colour photograph of 200 dpi resolution.**

10. For inclusion of Indian citizens living abroad, Form 6A should be submitted directly to the Electoral Registration Officer concerned or sent by post to the Electoral Registration Officer. If Form 6A is submitted in person before the ERO, the application should be accompanied by a photo copy of

the relevant pages of the passport containing the photograph and all other particulars of the applicant and the page containing the valid visa endorsement. The original passport will be verified by the ERO and returned immediately after verification. If the Form 6A is sent by post, it should be accompanied by a photocopy of the passport duly self-attested.

11. If a person shifts his place of ordinary residence outside the constituency in which he/she is already registered as an elector, he/she should apply in Form 6. In case a person shifts his place of ordinary residence from one place to another within the same constituency, the application should be made in Form 8A. For correction of particulars of a person entered in the electoral roll, one should apply in Form-8.

12. For getting replacement EPIC on shifting/ correction/ loss/ mutilation/ destruction, an application has to be made in Form-001 in the Taluk/Zonal Office.

**CHIEF ELECTORAL OFFICER**
**TAMIL NADU**

<u>பொதுத் (தேர்தல்கள்–1) துறை</u>

## செய்தி வெளியீடு

01.01.2021–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தினை இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

2. 16.11.2020 அன்று அனைத்து மாவட்டங்களிலும் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் (பெரும்பாலும் பள்ளிக் கட்டடங்களில் அமைந்துள்ள வாக்குச் சாவடிகள்) வரைவு வாக்காளர் பட்டியல்கள் வெளியிடப்பட்டுள்ளன. வரைவு வாக்காளர் பட்டியல்கள் elections.tn.gov.in என்ற வலைதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளன. மாவட்ட தேர்தல் அதிகாரிகளால் வாக்காளர் பட்டியலின் நகல் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினருக்கு வழங்கப்படும்.

3. புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம், 2021–ன் வரைவு வாக்காளர் பட்டியலின்படி தமிழ்நாட்டில் தற்போது 6,10,44,358 வாக்காளர்கள் உள்ளனர். (ஆண்கள்: 3,01,12,370, பெண்கள்: 3,09,25,603, மூன்றாம் பாலினத்தவர் 6,385 )

4. மாநிலத்திலேயே உயரளவு வாக்காளர்களைக் கொண்ட சட்டமன்றத் தொகுதியாக 6,55,366 வாக்காளர்களுடன், 27.சோழிங்கநல்லூர் தொகுதி உள்ளது (ஆண்கள்: 3,29,420, பெண்கள்: 3,25,858, மூன்றாம் பாலினத்தவர்: 88)

5. மாநிலத்திலேயே குறைந்த அளவு வாக்காளர்களைக் கொண்ட சட்டமன்றத் தொகுதியாக 1,73,107 வாக்காளர்களுடன் 164 கீழ்வேளூர் தொகுதி உள்ளது (ஆண்கள்: 84,902, பெண்கள்: 88,205, மூன்றாம் பாலினத்தவர்: இல்லை)

6. 21.11..2020, 22.11.2020, 12.12.2020 மற்றும் 13.12.2020 ஆகிய சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் (பொதுவாக, வாக்குச் சாவடிகள்) சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல்/நீக்கல்/திருத்தல்/இடமாற்றம் ஆகியவற்றுக்கான படிவங்கள் அந்த நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் கிடைக்கும். பூர்த்தி செய்த படிவங்களை அங்கேயே சமர்ப்பிக்கலாம்.

7. புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் 2021–ன் போது கோரிக்கை மற்றும் மறுப்புரைகள் அளிக்க அனுமதிக்கப்பட்ட 16.11.2020 முதல் 15.12.2020 வரை உள்ள காலத்தில், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம் / திருத்தங்கள்/ இடமாற்றம் செய்யவோ விரும்பும் வாக்காளர் அல்லது தகுதியுள்ள குடிமக்கள், படிவங்கள் 6, 7, 8 அல்லது 8ஏ ஆகியவற்றைப் பூர்த்தி செய்து கீழ்க்கண்டவாறு அளிக்கலாம்:

(1) அலுவலக வேலை நாட்களில் வாக்குச் சாவடி நிலை அலுவலரிடம் / வாக்காளர் பதிவு அதிகாரி / உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் அளிக்கலாம்.

(2) சிறப்பு முகாம் நாட்களில் அந்தந்த வாக்குச் சாவடி அமைவிடங்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் அளிக்கலாம்.

(3) அலுவலக வேலை நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் நிர்ணயிக்கப்பட்ட அலுவலர்களிடம் அளிக்கலாம்.

8. பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன், வசிப்பிட முகவரி மற்றும் வயது ஆகியவற்றுக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவேண்டும். இந்திய கடவுச் சீட்டு / ஓட்டுநர் உரிமம் / வங்கி / கிஸான்/ அஞ்சல் அலுவலக சமீபத்திய கணக்கு புத்தகம்/ குடும்ப அட்டை/வருமான வரித்துறையின் கணக்கீடு ஆணை / சமீபத்திய வாடகை உடன்படிக்கை/ இந்திய தபால் துறையால் சமீபத்தில் பெறப்பட்ட முகவரியுடன் கூடிய கடிதம் / சமீபத்திய குடிநீர்/ தொலைபேசி/ மின்சாரம்/ சமையல் எரிவாயு இணைப்பு ரசீது ஆகிய ஆவணங்களில் ஏதேனும் ஒன்றின் நகலை முகவரிச் சான்றாகச் சமர்ப்பிக்கலாம். வயது சான்றாக பிறப்புச் சான்றிதழின் நகல்/ வயது குறிப்பிடப்பட்ட 5, 8, 10ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்/ இந்திய கடவுச் சீட்டு / நிரந்தர கணக்கு எண் அட்டை / ஓட்டுநர் உரிமம் / யு.ஐ.டி.ஏ.ஐ–ஆல் வழங்கப்பட்ட ஆதார் அட்டை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றின் நகல் அளிக்கப்படலாம். 25 வயதுக்குக் கீழுள்ள மனுதாரர்கள் வயதுச்சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயமாகும். **www.nvsp.in, https://voterportal.eci.gov.in** **ஆகிய இணையதள முகவரி மற்றும் "வாக்காளர் உதவி" கைபேசி செயலி (VOTER HELP LINE Mobile App) ஆகியவற்றின் மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.**

9. 01.01.2021 அன்று 18 வயது நிறைவடைந்தவர்களும், வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்களும், பெயர் சேர்க்க படிவம் 6–ல் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் படிவத்தில் உள்ள உறுதிமொழியினை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும். வாக்காளர் பட்டியலில் இடம் பெறும் வாக்காளரின் புகைப்படங்களின் தரத்தை மேம்படுத்தும் விதமாக விண்ணப்பதாரர்கள் 200 dpi resolution கொண்ட புகைப்படங்களை அளிக்க / தரவேற்ற அறிவுறுத்தப்படுகிறார்கள்.

10. வெளிநாட்டில் வாழும் இந்தியக் குடிமக்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட, சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அதிகாரியிடம் படிவம் 6A நேரில் அளிக்கப்படவேண்டும் – அல்லது வாக்காளர் பதிவு அதிகாரிக்கு தபாலிலும் படிவத்தை அனுப்பலாம். வாக்காளர் பதிவு அதிகாரியிடம் படிவம் 6A நேரில் அளிக்கப்படும்போது அதனுடன் கூட விண்ணப்பதாரரின் புகைப்படம், ஏனைய பிற விவரங்களுடன் விசாவின் செயல்திறன் பற்றிய மேற்குறிப்பு அடங்கிய கடவுசீட்டின் தொடர்புடைய பக்கங்களின் ஒளிநகலையும் சேர்த்து அளிக்கவேண்டும். வாக்காளர் பதிவு அதிகாரி மூல கடவுசீட்டினை

ஒப்பிட்டுச் சரிபார்த்து உடனடியாக திரும்பக் கொடுத்துவிடுவார். படிவம் 6A தபாலில் அனுப்பப்படும்போது, கடவுசீட்டின் ஒளிநகல்கள் சுய சான்றொப்பமிட்டு இணைக்கப்பட வேண்டும்.

11. ஒரு வாக்காளர் தான் வசிக்கும் இருப்பிடத்தை ஒரு தொகுதியில் இருந்து வேறு தொகுதிக்கு மாற்றினால் படிவம் 6–ல் விண்ணப்பிக்க வேண்டும். வாக்காளர் தற்போது வசிக்கும் தொகுதிக்குள்ளேயே இடம் பெயர்ந்தால் படிவம் 8A–ல் விண்ணப்பிக்க வேண்டும். வாக்காளரின் விவரங்களில் திருத்தம் வேண்டியிருப்பின் படிவம் 8–ல் விண்ணப்பிக்க வேண்டும்.

12. இடம் பெயர்தல் / திருத்தம் / வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தொலைந்து போதல் ஆகிய காரணங்களுக்காக மாற்று புகைப்பட அடையாள அட்டை பெற வேண்டியிருப்பின் வட்டாட்சியர் / மண்டல அலுவலகத்தில் படிவம் 001-ல் விண்ணப்பிக்கலாம்.

தலைமைத் தேர்தல் அதிகாரி,
தமிழ்நாடு